2021-22-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

மாணவ-மாணவியருக்கு மட்டும்)

SUBJECT CODE 21 UTM 204

REG.NO

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : ஜீலை - 2022**

**பி.ஏ. தமிழ்** இலக்கியம் **மதிப்பெண**கள் : 70

இரண்டாம் **பருவம்** **நேரம்** : 3 **மணி**

**பகுதி** – III

**சிற்றிலக்கியம்**

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத்**
(K1)

**தேர்ந்தெடுத்து எழுதுக.** **(Qn. No. 1 - 5)**

1. நாககன்னியை மணந்த சோழ மன்னன் யார்?
   அ) சித்திரன் ஆ) பஞ்சவன் இ) கிள்ளிவளவன் ஈ) சுராதிராசன்
2. அகத்தியருக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தவர் யார்?
   அ) திருமால் ஆ) நான்முகன் இ) இந்திரன் ஈ) முருகன்
3. ‘அபிடேகவல்லி’ என்று குமரகுருபரர் யாரைக் குறிப்பிடுகிறார்?
   அ) அபிராமி ஆ) மீனாட்சி இ) அமுதாம்பிகை ஈ) காந்திமதி
4. இராமன் சேனைக்கு உணவாகப் போன நெல்லாகப் பள்ளன் கூறுவது எது?
   அ) பெருவெள்ளைச் சம்பா ஆ) மறுவில்லிச் சம்பா
   இ) நீலச்சம்பா ஈ) வில்லூன்றிச் சம்பா
5. அபிராமி அம்மைக்கு உச்சித் திலகமாகத் திகழ்வது யாது?
   அ) வெண்திங்கள் ஆ) செங்கதிர் இ) விண்மீன் ஈ) நெருப்பு

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.** **(K2)**

**(Qn. No. 6 - 10)**

6. ‘விருதராச பயங்கரன்’ என்னும் பட்டப் பெயருடைய மன்னன் யார்?
7. தமிழாகிய சக்கரவர்த்திக்குப் படைகளாக விளங்குவன யாவை?
8. ஆதியுலா என்று அழைக்கப்படும் நூல் எது?
9. குற்றாலநாதர் மீது காதல் கொண்ட பெண்ணின் பெயரைக் குறிப்பிடுக.
10. அரசர்க்குரிய நால்வகை சூழ்ச்சிகளாகக் குமரேச சதகம் குறிப்பிடுவன யாவை?

(த.பி.பா.)

**பகுதி – ஆ** (5x 4=20 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

(K3)

11. அ) கலிங்கத்துப்பரணி வெளிப்படுத்தும் காளி .கோயிலின் இயல்பை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) செயங்கொண்டார் பேய்களை எங்ஙனம் வருணித்துள்ளார்?

12. அ) முருகப்பெருமானை சப்பாணிக் கொட்டியருளுமாறு பகழிக்கூத்தர் வேண்டும் திறத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ) நிலவுக்கும் முருகனுக்குமான ஒற்றுமைகளை அம்புலிப் பருவப் பாடல் வழித் தெளிவுபடுத்துக.

13. அ) சிவபெருமான் கோலங்கொண்ட தன்மையைச் சேரமான் பெருமாள் எங்ஙனம் சுட்டியுள்ளார்?

(அல்லது)

ஆ) சவுந்தர பாண்டியரின் புயங்களின் இயல்புகளாகக் குமரகுருபரர் உரைப்பன யாவை?

14. அ) வசந்தவல்லி பந்தடித்தமையைக் காட்சிப்படுத்துக.

(அல்லது)

ஆ) பண்ணைக்காரனிடம் மூத்தபள்ளி முறையிட்ட செய்திகளைக் குறிப்பிடுக.

15. அ) அபிராமியம்மையின் திருமேனியை அபிராமிப் பட்டர் எங்ஙனம் வருணித்துள்ளார்?

(அல்லது)

ஆ) குணம் மாறாதனவாக குமரேச சதகம் கூறுவனவற்றைப் பட்டியலிடுக.

**பகுதி – இ** (4x 10=40 மதிப்பெண்கள்)

**பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க. வினா எண். 16க்குக் கண்டிப்பாக விடையளிக்கவும்.**

(FROM Qn. No : 17 to 21) (K4 (Or) K5)

16. முதுபேய் காட்டிய இந்திரசாலக் காட்சிகளைத் தொகுத்தெழுதுக.
17. கலிங்கத்துப் பரணி வாயிலாக அறியலாகும் தேவியின் சிறப்புக்களை விவரிக்க.
18. தமிழைச் சக்கரவர்த்தியாகத் தமிழ்விடுதூது ஆசிரியர் காட்டியுள்ளமையைத் தெளிவுபடுத்துக.
19. சிவபெருமானின் உலாப் புறப்பாட்டை விவரிக்க.
20. மழை வெள்ளம் ஐவகை நிலங்களில் பாய்ந்த காட்சியை விளக்குக.
21. நால்வருணத்தார் இயல்புகளாகக் குமரேச சதகம் மொழிவனவற்றை ஆராய்க.

---------------